# இலக்கணம் - தொடரும் தொடர்பும் அறிதல் (i) இத்தொடரால் குறிக்கப்பெறும் சான்றோர் (ii)அடைமொழியால் குறிக்கப்பெறும் நூல்

www.pandianprabu.weebly.com

கொடுக்கப்பட்டுள்ள தொடருக்கு தொடர்புடைய சான்றோரையோ அல்லது நூலையோ தேர்வு செய்தலே தொடரும் தொடர்பும் அறிதல் ஆகும்.

இதனை அடைமொழியால் குறிக்கப்பெறும் சான்றோர் - அடைமொழியால் அறியப்படும் நூல்கள் என்றும் அழைக்கலாம்.

**தொடர் :**
இங்கு தொடர் என்று சுட்டிக்காட்டுவது ஒரு சான்றோரை அல்லது ஒரு நூலை புகழ்ந்தோ, வியந்தோ சொல்லும்படியான சொற்களைக் கொண்ட தொடர் ஆகும்.

**தொடர்பு:**
கொடுக்கப்பட்டிருக்கும் சொற்றொடருக்கு எந்த நூல் அல்லது எந்த சான்றோர் தொடர்பானவர் என்பதைக் குறிப்பதாகும்.

## அடைமொழியால் குறிக்கப்பெறும் சான்றோர்:

தேசிய கவி, சிந்துக்குத் தந்தை, விடுதலைக்கவி, மகாகவி, பாட்டுக்கொரு புலவன், சீட்டுக்கவி, கற்பூரச்சொற்கோ, தற்கால தமிழ் இலக்கிய விடிவெள்ளி ஷெல்லி தாசன், செந்தமிழ்த் தேனீ, பைந்தமிழ்த் தேர்ப்பாகன், நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா- **பாரதியார்**

பாவேந்தர், புரட்சிக்கவி, புதுவைக் கவிஞர், பகுத்தறிவுக் கவிஞர், இயற்கை கவிஞர், புதுவைக்குயில், தமிழ்நாட்டின் ரசூல் கம்சத்தேவ், பூங்காட்டுத் தும்பி - **பாரதிதாசன்**

காவடி சிந்துக்குத் தந்தை (காவடி சிந்து நூல்),அண்ணாமலை கவிராயர் - **அண்ணாமலை**

காந்தீயக் கவிஞர் - **நாமக்கல் கவிஞர்**

சென்னையில் தமிழ்சங்கம் நிறுவியவர் - **வேங்கட ராஜுலு ரெட்டியார்**

உலகம் சுற்றிய முதல் தமிழ் அறிஞர் - **மு.வரதராசனார்**

சிலம்பு செல்வர் - **ம.பொ.சிவஞானம்**

சொல்லின் செல்வர் - **ரா.பி.சேதுப்பிள்ளை**

சொல்லின் செல்வன் - **அனுமன்**

தமிழ் தென்றல் - **திரு.வி.க.**

வள்ளலார் - **ராமலிங்க அடிகளார்**

கிருத்துவக் கம்பன் - **எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை**

தனது கல்லறையில் தன்னை ஓர் தமிழ் மாணாக்கன் என எழுத சொன்னவர் - **ஜி.யூ.போப்.**

ஆசு கவி - **காளமேகப் புலவர்.**

எழுத்துக்கு - **இளம்பூரணார்.**

சொல்லுக்கு - **சேனாவரையார்.**

உரையாசிரியர் - **இளம்பூரணார்.**

உச்சிமேல் புலவர் கொள் - **நச்சினார்க்கினியர்**

தமிழ் வியாசர் - **நம்பியார் நம்பி.**

புதினப் பேரரசு - **கோ.வி.மணிசேகரன்**

ஏழிசை மன்னர் - **தியாகராய பாகவதர்**

மொழி ஞாயிறு - **தேவநேயப் பாவாணர்**

கவிக்கோ - **அப்துல் ரஹ்மான்**

தமிழ்நாட்டின் வால்டர் ஸ்காட், தமிழ் வரலாற்று நாவலின் தந்தை - **கல்கி**

தமிழ் முனி, குருமுனி, குறுமுனி, பொதிகை முனி - **அகத்தியர்**

தொண்டர் சீர் பரவுவார், பக்தி சுவை நனி சொட்ட சொட்ட பாடிய கவி, உத்தம சோழ பல்லவராயன், இராமதேவர் (கல்வெட்டுகள்), அருண்மொழித் தேவர் - **சேக்கிழார்**

இலக்கண தாத்தா - **மே.வி.வேணுகோபால்**

முத்தமிழ்க்காவலர் - **கி.ஆ.பெ.விஸ்வநாதம்பிள்ளை**

சிறுகதையின் மன்னன், தமிழ்நாட்டின் மாப்பசான் - **புதுமைப்பித்தன்**

தென்னாட்டு மாப்பசான், சிறுகதையின் சித்தன், சிறுகதையின் முடிசூடா மன்னன் - **ஜெயகாந்தன்**

தென்னாட்டு பெர்னாட்ஷா, பேரறிஞர், தென்னாட்டு காந்தி - **அண்ணாதுரை**

தமிழ்நாட்டு பெர்னாட்ஷா - **மு.வரதராசனார்**

புதுக்கவிதையின் முன்னோடி, தமிழில் புதுக்கவிதை தோற்றுவித்தவர் - **ந.பிச்சமூர்த்தி**

தமிழ் தாத்தா - **உ.வே.சா**

தமிழ் நாடகத் தந்தை - **சம்பந்த முதலியார்**

தமிழ் நாடக தலைமையாசிரியர்

நாடக உலகின் இமயம் - **சங்கரதாஸ சுவாமிகள்**

உவமைக் கவிஞர் - **சுரதா**

தெற்காசிய சாக்ரடீஸ் - **பெரியார்**

தமிழ் உரைநடையின் தந்தை, தமிழ் இலக்கிய தோற்றுனர் - **வீரமாமுனிவர்**

குற்றியலுகர ஒலியை முதலில் உவமையாக எடுத்தாண்டவர், தமிழ்நாட்டின் ‘வேர்டு ஸ்வர்த்’, பாவலர் மணி, பாவலர் மன்னன், பிரெஞ்ச் நாட்டின் ‘செவாலியே’, தமிழ் நாட்டின் தாகூர், கவிஞரேறு - **வாணிதாசன்.**

கவி யோகி - **சுத்தானந்த பாரதி.**

தற்கால உரைநடையின் தந்தை - **ஆறுமுக நாவலர்.**

தனித் தமிழ் இலக்கியத்தின் தந்தை - **மறைமலைஅடிகள்**

வில்லுப் பாட்டுக்காரர் - **கொத்தமங்கலம் சுப்பு.**
<
ஆசிய ஜோதி - **நேரு**

ஆசிய ஜோதி நூலை எழுதியவர் - **கவிமணி**

மூல நூலை எழுதியவர் - **எட்வின் அர்னால்ட்**

திருவாதவூரர், தென்னவன், உத்தம சீலன் - **மாணிக்கவாசகர்**

தமிழ்நாட்டின் அட்லி சேஸ் - **சுஜாதா**

தென்னாட்டு தாகூர் - **வெங்கட ரமணீ**

பண்டித மணி - **கதிரேசன் செட்டியார்**

சிவபெருமானால் அம்மையே என அழைக்கப்பட்டவர், பேயார்
- **காரைக்கால் அம்மையார்**

வெண்பா பாடுவதில் வல்லவர் - **புகழேந்தி**

பிள்ளைத் தமிழ் இலக்கிய முன்னோடி - **பெரியாழ்வார்**

தமிழில் முதல் இலக்கிய ஞானபீடவிருது. - **அகிலன்**

தமிழில் உபநிடதங்கள் படைத்தவர் - **தாயுமானவர்**

கவிராட்சசன் - ஒட்டக்கூத்தர்

திவ்ய கவி, அழகிய மணவாளர் தாசர் ,தெய்வக் கவி - **பிள்ளைப் பெருமாள் (ஐயங்கார்)**

நாட்டுப்புறவியலின் தந்தை - **ஜேக்கப் கரீம்.**

தமிழ் நாட்டுப்புறவியலின் தந்தை - **வானமா மாலை.**

மண் தோய்ந்த புகழினான் - **கோவலன்**

வீடு வீடாக பிச்சையெடுத்த தமிழ் தொண்டு செய்தவர் - **ஆறுமுக நாவலர்**

பொய்யா குலக்கொடி நதி - **வைகை**

கணக்காயர் என்பவர் - **சோமசுந்தர பாரதியார்**

நீதி நாயகர் - **வேதநாயகம் பிள்ளை**

கம்பரை ஆதரித்த வள்ளல் - சடையப்ப வள்ளல்

முச்சங்கம் வளர்கூடல் நகர் - **மதுரை**

தமிழ் நந்தி - **மூன்றாம் நந்தி வர்மன்**

தண்டமிழ் ஆசான், நன்னூல் புலவன், கூலவாணிகன் - **சீத்தலைச் சாத்தனார்**

நற்றமிழ்ப் புலவர், மதுரை தமிழ்ச் சங்கத் தலைவர் - **நக்கீரர்**

தமிழ் கவிஞருள் அரசர் - **திருத்தக்கதேவர்**

தமிழ் வேதம் செய்த மாறன், குருகைக் காவலன், பராங்குசன், சடகோபன் - **நம்மாழ்வார்**

சூடிக்கொடுத்த சுடர்கொடி, வைணவம் தந்த செல்வி - **ஆண்டாள்**

குழந்தை கவிஞர் - **அழ.வள்ளியப்பா**

மக்கள் கவிஞர் - **பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார்**

சைவ சமயத்தின் செல்வி - **மங்கையற்கரசியார்**

திராவிட ஒப்பிலக்கண தந்தை - **கார்டுவெல்**

நவீன கம்பர் - **மீனாட்சி சுந்தரம் பிள்ளை**

நாவலர் - **சோமசுந்தர பாரதி**

இந்திய சினிமா தந்தை - **தாதாசாகிப் பால்கே**

ஆட்சி மொழிக் காவலர் - **ராமலிங்கனார்**

ஆஸ்தானக் கவிஞர் - **நா.காமராசன்**

கவியரசு - **வைரமுத்து,கண்ணதாசன்**

திருக்குறளார் - **வி.முனுசாமி**

கவிப்பேரரசு - **வைரமுத்து**

தசாவதாணி - **செய்கு.தம்பியார்**

பண்மொழிப் புலவர் - **அப்பாதுரை (எ) மீனாட்சி சுந்தரம் பிள்ளை**

நரை முடித்த சொல்லால் முறை செய்த அரசன் - **கரிகாலன்**

திருமுறைகளை தொகுக்குமாறு வேண்டிய அரசன் - **முதலாம் ராஜராஜன்**

சைவ உலக செஞ்ஞாயிறு, ஆளுடை அரசு, தர்ம சேனர், மருள் நீக்கியார், அப்பர்- **திருநாவுக்கரசர்**

தோடுடை செவியன், காளி வள்ளல். ஆளுடைப் பிள்ளை, தோணி புறத் தோன்றல், திராவிட சிசு, நாளும் இன்னிசையால் தமிழ் பரப்புவர் - **திருஞான சம்பந்தர்**

ஆளுடை நம்பி, திருநாவலூரார், நம்பி ஆரூரார் வன்தொண்டர், தம்பிரான் தோழர் - **சுந்தரர்.**

நல்லிசைப் புலவர் தமிழ் மூதாட்டி - **ஔவையார்**

மும்மொழிப் புலவர் - **மறைமலை அடிகள்**

விஷ்ணுசித்தர் - **பெரியாழ்வார்.**

தேசியம் காத்த செம்மல்(திரு.வி.க), பிரணவ கேசரி,வேதாந்த பாஸ்கர் - **முத்துராமலிங்க தேவர்**

திருக்குற்றால நாதர் கோவில் வித்வான் - **திரிகூடராசப்ப கவிராயர்**

இரட்டைப் புலவர்கள் - **இளஞ்சூரியர், முதுசூரியர்**

## அடைமொழியால் குறிக்கப்படும் நூல்கள்:

மண நூல், முக்தி நூல், காமநூல், இயற்கை தவம் - **சீவக சிந்தாமணி**

தமிழ் மறை, முப்பால், உத்திரவேதம், தெய்வ நூல், உலகப்பொது மறை, வாயுரை வாழ்த்து, வள்ளுவ பயன், பொய்யா மொழி, ஈறடி வெண்பா,

இயற்கை வாழ்வில்லம், காலம் கடந்த பொதுமை நூல், தமிழ் மாதின் இனிய உயிர் நிலை. - **திருக்குறள்**

செந்தமிழ்க்காப்பியம், முத்தமிழ்க்காப்பியம், குடிமக்கள் காப்பியம், முதற்காப்பியம், நாடக காப்பியம், மூவேந்தர் காப்பியம், தேசிய காப்பியம், சமுதாயக்காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், புரட்சிக்காப்பியம், உரைநடையிட்ட பாட்டுடைச்செய்யுள், சிலம்பு, சிறப்பு அதிகாரம்
- **சிலப்பதிகாரம்**

இரட்டைக் காப்பியங்கள்-**சிலப்பதிகாரம்/மணிமேகலை**

நெடுந்தொகை - **அகநானூறு**

கற்றறிந்தார் ஏற்கும் நூல் - **கலித்தொகை**

பௌத்த காப்பியங்கள் - **மணிமேகலை /குண்டலகேசி.**

மணிமேகலை துறவு, துறவு நூல், பௌத்த காப்பியம்,அறக்காப்பியம், சீர்திருத்தக் காப்பியம் - **மணிமேகலை**

புறம், புறப்பாட்டு,தமிழ் வரலாற்றுக் களஞ்சியம் - **புறநானூறு**

வஞ்சி நெடும் பாட்டு - **பட்டினப்பாலை**

பாணாறு - **பெரும்பாணாற்றுப்படை**

பெருங்குறிஞ்சி, காப்பியப்பாட்டு,உளவியல் பாட்டு - **குறிஞ்சிப்பாட்டு**

புலவராற்றுப் படை, முருகு,கடவுளாற்றுப் படை - **திருமுருகாற்றுப்படை**

வேளாண்வேதம், நாலடி நானூறு,குட்டித் திருக்குறள் - **நாலடியார்**

சின்னூல் என்பது - **நேமிநாதம்**

வெற்றி வேட்கை, திராவிட வேதம், தமிழ் மறை வேதம், திருவாய் மொழி
- **நறுந்தொகை**

திருத்தொண்டர் புராணம், வழிநூல்,திருத்தொண்டர் மாக்கதை, அறுபத்து மூவர் புராணம் -**பெரிய புராணம்**

ராமகாதை, ராம அவதாரம், கம்பராமாயணம், சித்திரம் - **இராமாயணம்**

முதுமொழி, மூதுரை, உலக வசனம்,பழமொழி நானூறு - **பழமொழி**

கம்பர் தன் நூலுக்கு இட்ட பெயர் - **ராமாவதாரம்.**

தமிழ் மொழியின் உபநிடதங்கள் - **தாயுமானவர் பாடல்கள்**

குறத்திப்பாட்டு, குறம், குறவஞ்சி நாடகம் - **குற்றாலக் குறவஞ்சி**

குழந்தை இலக்கியம் - **பிள்ளைத் தமிழ்**

உழத்திப்பாட்டு - **பள்ளு**

இசைப்பாட்டு -**பரிபாடல் / கலித்தொகை**

அகவல் காப்பியம், கொங்குவேள் மாக்கதை - **பெருங்கதை**

தமிழர் வேதம் - **திருமந்திரம்**

தமிழ்வேதம், சைவ வேதம், தெய்வத்தன்மை கொண்ட அழகிய வாய்மொழி - **திருவாசகம்**

தமிழ் வேதம் - **நாலாயிர திவ்ய பிரபந்தம்**

குட்டி தொல்காப்பியம் - **தொன்னூல் விளக்கம்**

குட்டி திருவாசகம் - **திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி.**

பத்து பருவங்களைக் குறிக்கும் நூல் - **பிள்ளைத் தமிழ்.**

திருக்குறளின் பெருமையைக் குறிக்கும் நூல் - **திருவள்ளுவ மாலை.**

புலன் எனும் சிற்றிலக்கிய வகை - **பள்ளு**

தூதின் இலக்கணம் - **இலக்கண விளக்கம்.**

தமிழின் முதற்கலம்பகம் - **நந்தி கலம்பகம்**

தமிழர்களின் கருவூலம் - **புறநானூறு**

96 வகை சிற்றிலக்கிய நூல் - **சதுரகாதி.**

கிருஸ்துவர்களின் களஞ்சியம் - **தேம்பாவணி**

தமிழரின் இரு கண்கள் - **தொல்காப்பியம் /திருக்குறள்**

வடமொழியின் ஆதி காவியம் - **இராமாயணம்**

64 புராணங்களைக் கூறும் நூல் - **திருவிளையாடற் புராணம்**

இயற்கை ஓவியம் - **பத்துப்பாட்டு**

இயற்கை இன்பக்கலம் - **கலித்தொகை**

இயற்கை பரிணாமம் - **கம்பராமாயணம்**

இயற்கை இன்ப வாழ்வு நிலையம் - **சிலப்பதிகாரம் /மணிமேகலை**

நட்புக்கு கரும்பை உவமையாக கூறும் நூல் - **நாலடியார்.**

பாவைப்பாட்டு - **திருப்பாவை**

பதினெட்டு உறுப்புகளை பாடப்பெற்ற நூல் - **கலம்பகம்**